**இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை பொற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையின் ("அதிகாரசபை") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

**1.2 அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களைஇலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான

வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான உள்ளக கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| உத்தியோகத்தர் கடன் வட்டி ரூபா 20,632 ஐ.அ.டொலர் கணக்கு மீதான வங்கி வட்டி ரூபா 1,780,156, நிலையான மீதான வங்கி வட்டி ரூபா 3,377,325 மற்றும் நிலையான வைப்பு மீதான றாணயமாற்று இலாபம் ரூபா 1,742,230 ஆன தொகையிற்காக பொதுப் பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்காக பயன்படுத்தப்பட்ட பரீட்சை மீதியில் வெளிப்படுத்தப்பட்டது. மேலும், அந்த மீதிகளிற்கான விரிவான பட்டியல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் உடன்பட்டதுடன் உரிய உத்தியோகத்தர்கள் கடன் வட்டி, டொலர் கணக்கு மீதான வட்டி மீதான வட்டி மற்றும் நிலையான வைப்பு வட்டி மற்றும் நிலையான வைப்பு மீதான நாணயமாற்று இலாபம் என்பவற்றிற்கான பேரேட்டுக் கணக்குகள் பேணுவதற்கு உரிய உத்தியொகத்தர்கள் அறிவுறுத்தப் பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் அவற்றினை வெளிப்படுத்தியிருந்தது. | பொது பேரேடு சகல முழு பேரேட்டு கணக்குகளையும் உள்ளடக்கி பணப்பட வேண்டும். |

**1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) SLPSAS 01- நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தல். | | |
| (i). நியமத்தின் 63 (ஆ), (உ) மற்றும் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தலின் நாணயம் மற்றும் தெளிவாக இனங்காணும் நொக்கில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தலில் பயன்படுத்தப்பட்ட அண்ணளவு பெறுமதி மற்றும் நிதிக்கூற்றின் ஒவ்வொரு நிகழிவின் முறையான புரிந்துணர்வை பெறுவதற்கு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபை நாணய வகை மற்றும் நாணய அண்ணளவுப் பெறுமதிகளை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் உடன்பட்டதுடன் நாணயத்தின் வகை மற்றும் நாணய அண்ணளவுப் பெறுமதியை வெளிப்படுத்தவதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். | முகாமைத்துவம் நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ii). நியமத்தின் பந்தி 150 (அ), (ஆ) இன் பிரகாரம் பதிவுகள் அதனுடைய விபரங்பன், முழு நடவடிக்கை மற்றும் ஆரம்ப நடவடிக்கையிலிருந்தான இடம் மற்றும் சட்டத்தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபை அதிலிருந்தான இடம் மற்றும் சட்டம், செயற்பாடுகளின் தன்மை மற்றும் அதிகாரசபையின் பிரதான நடவடிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதை அதிகாரசபை பொறுப் பேற்றிருந்ததுடன் பந்தி (ii) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டனர். | முகாமைத்துவம் நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஆ) அதிகாரசபையின் பணிப்பாளர் சபை 2024 பெப்ரவரி 28 இல் நிதிக் கூற்றுக்களை அனுமதித்திருந்தது. இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 06- அறிக்கையிடல் திகதியின் பின்னரான நிகழ்வுகளின் 24 மற்றும் 25 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் வழங்குவதற்காக அனுமதிக்கப்படும் போது வருகை திகதியை வெளிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபையானது வழங்குவதற்காக அனுமதிக்கப்படும் போது மற்றும் அந்த அனுமதியை வழங்கிய நபர் திகதியை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் உடன்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களை அனுமதிக்கும் திகதி மற்றும் அதிகாரமளிக்கும் நபரை வெளிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | முகாமைத்துவம் நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 14- தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்களின் 16 மற்றும் 34 (அ), (ஆ) பந்திகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள் கட்டாயம் செய்யப்பட வேண்டும். எ்வாறாயினும், அதிகாரசபையானது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பின்வரும் பிரதான முகாமைத்துவ ஆளணியின் வேதனங்கள் பற்றிய முக்கியமான தகவல்களை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | SLPSAS – 14 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பின்வரும் பிரதான முகாமைத்துவ ஆளணியின் வேதனங்கள் பற்றிய முக்கியமான தகவல்களை வெளிப்டுத்துவதற்கு உதியோகத்தர்களை அறிவுறுத்தியிருந்தனர். | முகாமைத்துவம் நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

| தொடர்புபட்ட தரப்பினர் | உறவுமுறை | கொடுக்கல் வாங்கல் | ரூபா |
|---|---|---|---|
| திரு. சுரத் ஒவித்தகம | தலைவர் 01.10.2023 – தற்போது வரை) பணிப்பாளர் நாயகம் (10.10.2021 – 30.09.2023) | குறுகியகால ஊழியர் நலன் | 11,436,482 |
| ஏனைய சபை உறுப்பினர்கள் | சபை உறுப்பினர்கள் | அமர்வுப் படி | 230,000 |

| | | |
|---|---|---|
| (ஈ) அதிகாரசபையானது 2023 ஆம் ஆண்டில் ஓய்வூதியமாக ரூபா 1,246,522 ஆன தொகை செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், லங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இல. 19- ஊழியர் நலன்புரியின் 141(இ) (vi) ஆம் பந்தியின் பிரகாரம் செலுத்தப்பட்ட ஓய்வூதிய பணிக் கொடையின் விபரங்கள் நிதிக் கூற்றுக்களிற்கான உரிய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | SLPSAS – 19 இன் பிரகாரம் உரிய குறிப்புக்களில் ஓய்வூதிய பணிக் கொடையை வெளிப்டுத்துவதற்கு உத்தியோகத்தர்களை அறிவுறுத்தியிருந்தது. | முகாமைத்துவம் நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

### 1.5.3. கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் ரூபா 926.5 மில்லியனில் செய்யப்பட்ட பெற்றோலிய கொள்வனவு தரவு குறிப்பு இல. 10 இற்கமைய நடைமுறையலலாச் சொத்தாக இனங்காணப்பட்டது. TGS-NOPEC நோர்வேயில் ஜயோபிசிக்கல் கம்பனி ASA மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் உடன்படிக்கையுடன் பெறப்பட்ட பெற்றோலய கொள்வனவு அளவை தரவு பிரதிநித்துவப்படுத்துகின்றது. இந்த | அவதானிப்புகளுடன் உடன்பட்டதுடன் இந்த ரூபா 926.5 மில்லியன் பெற்றோலிய கொள்வனவு தரவு வெளிப்படுத்தல் அளவீடு அங்கீகரிப்பதற்கு முறையான கணக்கீட்டு கொள்கை தெரிவதற்கு அறிவுறுத்தப்பட்டனர். | கற்பனைச் சொத்துக்களிற்கான கணக்கீட்டுக் கொள்கை நியமத்திற்கமைய வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் இதன்படி அங்கீகாரம். அளவீடு மற்றும் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |

பெறுமதி சில ஆண்டுகளிற்கு முன்னர் இலங்கையில் மன்னாரில் பெற்றோலிய வளங்களை அகழும் பொது மேற்குறித்த வெளிநாட்டு கம்பனியால் பெறப்பட்ட தரவை கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசாங்கத்தால் செலுத்தப்பட்ட தொகையை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. இந்த தரவு பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையின் நடைமுறையல்லாத சொத்தாக பேணப்பட்டிருந்தது. மேலும் இந்த தரவு ரூபா 382,867 ஆன வருடாந்த கட்டணம் ஏற்படுவதன் மூலம் தரவு பாதுகாப்பை அளவீடு செய்வதாக வெளிநாட்டுக் கம்பனி குறிப்பிடுகின்றது. ஆகவே, இந்த தரவு அதிகாரசபைக்கான கற்பனை சொத்தாக இருக்க்கூடும். 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபை பெற்றோலிய தரவு விற்பனைகளிலிருந்தான வருமானமாக ரூபா 223,426,889 உழைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வு ஆண்டிற்காக எவ்வித வருமானமும் உழைக்கப் பட்டிருக்கவில்லை. ஆகவே, இது குறைபயன்பாட்டு சொத்தின் கடன்கழிவு புள்ளியாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அதிகாரசபை SLPSAS – 03 – கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் தவறுகளின் 09 மற்றும் 15 ஆம் பந்திகளின் பிரகாரம் இந்த மீதி புரிந்து கொள்வதற்கு பயன்பாட்டாளர்ள் இயலாதிருந்த இங்கீகார், அளவீடு மற்றும் வெளிப் படுத்தல்களிற்கான முறையான கணக்கீட்டுக் கொள்கையை வெளிப் படுத்தியிருக்கவில்லை. மேலும் கடன்கழிவு ஆய்விற்காக திரட்டாமல் அல்லது பரீட்சிக்காமல் 2021 ஆம் ஆண்டிலிருந்து இந்த ரூபா 926.5 மில்லியன் மீதி தொடர்ந்திருந்தது.

### 1.5.4. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கட்டுநிதி ரூபா 8,600,000 ஆக இருந்தது. ரூபா 2,298,997 ஆன தொகையிலிருந்து SOCL இல் திறைசெரிக்கு திருப்பப்பட்டதாக இனங்காளப்பட்டது. எவ்வாறாயினும், இந்த மீதி பணிப்பாளர் (நிதி)யால் பதில்கடமை செய்யப்பட்ட | 2023 ஆம் ஆண்டின் பொது கட்டுநிதியாக ரூபா 8,600,000 ஆன மொத்த தொகை இனங்காணப்பட வேண்டுமென உடன்பட்டுள்ளது. ஆகவே, திறைசேரியானது 2023 ஆம் ஆண்டு இறுதியில் PDASL இன் காசு மீதியாக தொகையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும். | அதிகாரசபைக்குரிய சகல அட்டுறு வருமானங்களும் நிதிக்கூற்றுக்களில் இனஙகாணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளங்கங்களின் பிரகாரம், பொது திறைசேரிக்கு இந்த பணத்தை திருப்புவதற்கு வேண்டப் பட்டிருக்கவில்லை. ஆகவே, SOCL இல் வருமானமாக ரூபா 8,600,000 திறைசேரியிலிருந்து பெறப்பட்ட கட்டுநிதியை இனங்காண்பதற்கு வேண்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்காக ரூபா 6,301,003 மாத்திரமே இனங்காணப்பட்டிருந்தது. ஆகவே, மீளாய்வாண்டிற்காக செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,298,997 ஆல் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அதிகாரசபையின் வங்கிக் கூற்றின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 88115198 ஆம் இலக்க BOC A/C சாதகமான வங்கி மீதி ரூபா 2,298,997 ஆக இருந்தது. எவ்வாறாயினும், இந்த மீதி மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் அல்லது காசு மற்றும் காசிற்கு சமமானவையின் கீழ் நிதி நிலைமை கூற்றின் முன்பக்கத்தில் எடுக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. . ஆகவே, மீளாய்வாண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மேற்குறிப்பிட்ட விக்கற்களின் பிரகாரம், ரூபா 2,298,997 ஆன தொகை 2023 இறுதிக் கணக்குகளில் 2023 ஆம் ஆண்டு இறுதியில் PDASL காசு மீதீதியாக குறிப்பிடப்படும். | சகல காசு மற்றும் காசிற்கு சமமான மீதிகளும் நிதிக்கூற்றக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | குறித்த நியமத்திற்கான குறிபுரைகளுடன் இணங்காமை | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2021 அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகையின் 2.4 ஆம் வழிகாட்டல் | பணப்பாளர் சபையானது இணைப்பு II வழங்கப்பட்ட படித்தை பயன்படுத்தி வருடாந்தம் பயணிப்பாளர் சபையின் செயலாளருக்கு தனிப்பட்ட ரீதியில் அவர்களுடைய உறவு முறையை கட்டாயம் வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், சபையின் எந்தவொரு உறுப்பினரும் மீளாய்வாண்டிற்காக அத்தகைய வெளிப்படுத்தலை செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகையின் 2.4 ஆம் வழிகாட்டல் பிரகாரம், PDASL ஒத்துக் கொண்டது. எதிர்காலத்தில், வருடாந்தம் அத்தகைய வெளிப்படுத்தலை பெறுவதற்கு உரிய அளவீடுகளை எடுக்கின்ற அசண்டை மற்றும் கடப்பாடுகள் எடுக்கப்படும். | வழிகாட்டல் பிரகாரம் வருடாந்தம் பணிப்பாளர் சபையால் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 இல் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் | | | |

| | | | |
|---|---|---|---|
| அதிகாரச்சட்டம் (i) 2021 இல் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் அதிகாரச் சட்டத்தின் 2(அ) ஆம் பிரிவு | அதிகாரசபையின் நோக்கத்தில் ஒன்று இலங்கையில் சகல பெற்றோலிய வளங்களினதும் பெற்றோலிய கைத்தொழிலிற்கு எதிரானதை மேவுதல், அகழ்தல், அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் முகாமைத்துவம் என்பவற்றிற்காக தேசிய கொள்கையை வடிவமைப்பதில் ஆலோசனை வழங்குவதற்கு கொள்கை ஆலோசனை குழுவை தாபிப்பதாக உள்ளது. எவ்வாறாயினும், 2024 ஒக்தோபர் வரை கொள்கை ஆலோசனை குழுவை தாபித்திருக்கவில்லை. | PDASL உடன்பட்டது. பெற்றோலிய கைத்தொழிலை வெளிப்படுத்துவதற்காக தேசிய கொள்கை வடிவமைப்பதற்காக கண்டிப்பாக உள்ளது. PDASL ஆனது அமைச்சின் உதவியுடன் விரைவில் கொள்கை ஆலோசனை குழுவை தாபிக்கும் என நம்புவதுடன் கொள்கை ஆலோசனை குழுவிற்கு பெற்றோலிய கைத்தொழிலிற்கு எதிரானவை மீது தேசிய கொள்கை தொடர்பில் PDASL பரிந்துரைகள் செய்திருந்தது. | பெற்றோலிய கைத்தொழிலிற்கு எதிரானவை மீது தேசிய கொள்கை வடிவமைப்பதை நிறைவேற்றுவதற்கு கொள்கை ஆலோசனை குழுவை தாபிப்பதற்கு நடவடிககை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 2021 இல் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் அதிகாரச் சட்டத்தின் 3(3)(அ) மற்றும் 3(3) (இ) ஆம் பிரிவுகள் | அதிகாரசபையானது கொள்கை ஆலோசனை குழுவிற்கு பெற்றோலிய கைத்தொழிலிற்கு எதிரானவை மீது தேசிய கொள்கை தொடர்பில் பரிந்துரைகள் செய்வதற்காகவும் இலங்கையில் பெற்றோலிய கைத்தொழிலிற்கு எதிரானவை தொடர்புபட்ட சகல பிரமாண செயற்பாடுகளையும் செயற்படுத்துவதற்கும் பொறுப்பாக உள்ளது. எவ்வாறாயினும், கொள்கை ஆலோசனை குழுவிற்கு பெற்றோலிய கைத்தொழிலிற்கு எதிரானவை மீது தேசிய கொள்கை தொடர்பில் மற்றும் இலங்கையில் பெற்றோலிய கைத்தொழிலிற்கு எதிரானவை தொடர்புபட்ட சகல பிரமாண செயற்பாடுகள் மீது பரிந்துரைகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | PDASL உடன்பட்டது. பெற்றோலிய கைத்தொழிலை வெளிப்படுத்துவதற்காக தேசிய கொள்கை வடிவமைப்பதற்காக கண்டிப்பாக உள்ளது. PDASL ஆனது அமைச்சின் உதவியுடன் விரைவில் கொள்கை ஆலோசனை குழுவை தாபிக்கும் என நம்புவதுடன் கொள்கை ஆலோசனை குழுவிற்கு பெற்றோலிய கைத்தொழிலிற்கு எதிரானவை மீது தேசிய கொள்கை தொடர்பில் PDASL பரிந்துரைகள் செய்திருந்தது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) 2021 இல் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் அதிகாரச் சட்டத்தின் 4(ஆ) ஆம் பிரிவு | அதிகாரசபையானது நிர்ணயிக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட தொகுதியில் முதலீட்டிற்காக கிடைத்த நிலப்பரப்பில் ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுததல் கடமையாக உள்ளது. எவ்வாறாயினும், அதிகார சபையானது கிடைத்த துடுகளை ஊக்கப்படுத்தி மற்றும் சந்தைப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட பிரமாணங்கள் கிடைக்காமையால் முதலீட்டிற்காக கிடைத்த 922 இனங்கண்ட தொகுதிகளை ஊக்கபடுத்தி சந்தைப்படுத்துவதற்கு இயலாதிருந்தது. | பின்வரும் இரண்டு பிரமாணங்கள் 2023.01.05 இல் பிரமாணப்படுத்தப்பட்டிருந்தன<br>i. 01/2023 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் (இணைந்த கற்கை உடன்படிக்கைகள்) பிரமாணங்கள்<br>ii 02/2023 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சேவை வழங்குநர் அனுமதி) பிரமாணங்கள்<br><br>பிரமாணங்கள் வெளியிடப்பட்ட வழியில் ஆரம்பத்தில் இணைந்த கற்கைகளிற்காக (JS) அக்கறைகளின் வெளிப்பாடுகளை (EOIs) அழைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வேண்டப்பட்டது. எவ்வாறாயினும் சட்ட குறைபாடுகளை வெளிப்படுத்திய பின்னர் EOIs இற்காக அழைக்கின்ற 2023.07.19 ஆந் திகதிய (CP இல. 23/1338/621/056) அமைச்சரவை தீர்மானம் மற்றும் வெளியிடப்பட்ட இணைந்த கற்கை (JSA) உடன்படிக்கை தொடர்புபட்ட அவதானிப்புகளை கொண்ட சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் தொகுதிப் படங்கள் என்பன அனுமதிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டு முழுவதும் PDASL ஆனது நில அளவை திணைக்களத்தின் உதவியுடம் காணித் துண்டுகளின் படத்தை தயாரித்தல் மற்றும் JSA பிரமாணங்களை திருத்துதல் உள்ளடங்கிய அந்த விடயங்களில் தீர்வு காண்பதிலேயே கவனம் செலுத்தியது. | முதலீட்டிற்காக கடைத்த 922 தொகுதிகளை ஊக்குவித்து சந்தைப்படுத்தவதற்கு விடயங்களை இனங்கண்டு நிறை வேற்றுவதற்கு தர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) 2021 இல் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் அதிகாரச் சட்டத்தின் 4(ஊ) ஆம் பிரிவு | அதிகாரசபையானது பெற்றோலிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு வேண்டப்பட்டவாறு நெறிப்படுத்தல் மற்றும் வழிகாட்டல்கள் போன்றன வழங்குவதற்கு அதிகாரமளிதிருந்தது. எவ்வாறாயினும், பெற்றோலிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு அதிகாரசபையால் பிரமாணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | பெற்றோலிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு வேண்டப்பட்டவாறு நெறிப்படுத்தல் மற்றும் வழிகாட்டல்கள் தயாரித்து வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 116,970,816 வருமானத்தை விஞ்சிய செலவினமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 11,626,790 ஆக இருந்தது. ஆகவே நிதி விளைவுகளில் ரூபா 105,344,026 தொகையான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. ரூபா 65,246,539 ஆல் திறைசேரியிடமிருந்தான கட்டுநிதி வீழ்ச்சி, முன்னைய ஆண்டிற்கான ரூபா 16,192,355 ஆன வெளிநாட்டு நாணயமாற்று இலாபத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான ஏற்பட்ட ரூபா 22,435,568 ஆன வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 10,826,775 ஆல் ஏனைய செலவினம் என்பவற்றின் அதிகரிப்பு என்பனவே இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பிரதன வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சியின் சதவீத்துடன் பிரதான வருமானத்தின் மீளாய்வு பின்வருமாறு இருந்தன.

| உரிய விடயங்கள் | 2023 ரூபா 000’ | 2022 ரூபா 000’ | முரண் | சதவீதம் % |
|---|---|---|---|---|
| வருமானம் | 6,301 | 73,846 | (67,545) | (91) |
| ஏனைய வருமானம் | 6,920 | 1,048 | 5,872 | 560 |
| நாணயமாற்று இலாபம் / (நட்டம்) | (22,435) | 16,192 | (38,627) | (239) |
| நிர்வாக மற்றும் தாபனச் செலவினம் | 96,916 | 93,918 | 2,998 | 3 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினம் | - | 8,783 | (8,783) | (100) |
| நிதி மற்றும் ஏனைய செலவினம் | 10,840 | 13 | 10,827 | 83,285 |
| செலவினத்தை விஞ்சிய வருமானம் | (116,971) | (11,627) | (105,344) | 906 |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையானது 2021 ஒக்தோபரிலிருந்து சிலிங்கோ கட்டிடத்தில் வாடகை இடத்தில் அதன் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. மாதம் ஒன்றின் சதுர அடிக்கான வாடகை ரூபா 245 ஆக இருந்ததுடன் அதிகாரசபையால் 8,512 சதுர அடி வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. ஆகவே, வாடகை செலவினமாக மீளாய்வாண்டிற்காக ரூபா 28,937,103 ஆன மொத்த தொகை ஏற்பட்டிருந்தது. பொதுத் திறைசேரியால் ஒதுக்கப்பட்ட அரச நிதிகளால் வாடகைச் செலவினம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 11 உத்தியோகத்தர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்ததுடன் 2024 செப்தெம்பரில் 10 உத்தியோகத்தர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். ஆகவே, கணக்காய்வின் பொது பெருமளவு தொகையான இடம் பயனற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2023 யூலை 20 இல் குத்தகை உடன்படிக்கை காலாவதியாகியிருந்ததுடன் அதிகாரசபையானது பேட்டி கேள்வி கொள்வனவு நடை முறையை பின்பற்றாமல் ஆண்டு அடிப்படையில் உடன்படிகை நீடிக்கப்பட்டிருந்தது. | PDASL இற்கான அலுவலக இடம் 2011 இலிருந்து சிலிங்கோ கட்டிடத்தல் வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. முன்னர் பெற்றோலிய வளங்கள் செயலகத்தில் இருந்ததுடன் இந்நேரத்தில் ஏறத்தாழ 36 ஊழியர்கள் இருந்ததுடன் இந்த வளவில் 5-6 பயிற்சியாளர்கள் வசித்திருந்தனர். இந்த வாடகை உடன்படிக்கை 2023 யூலையில் காலாவதியாகியிருந்ததுடன் PDASL இற்காக பொருத்தமான இடம் தெரிவு செய்வதற்கு போட்டி கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய கேள்வியாளர்கள் அவர்களுடைய விலையை ஐ.அ.டொலரில் கோரியிருந்தனர். மேலும், பின்னர் பெறுப்புடைய கேள்வியாளர் ஐ.அ.டொலரில் பெரிய தொகை வைப்பு செய்வதற்கு நிபந்தனை விதித்திருந்தது. மேலும், அந்நேரத்தில் நாணயமாற்று வீத வேறுபாடு கருத்திற்கொள்ள வேண்டியிருந்தது. கொள்வனவு குழுவால் தெரிவு செய்யப்பட்ட கேளிவியாளரின் தீர்மானம் PDASL இன் பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு முன்வைக்கப் பட்டிருந்தது. எனவே, PDASL ஆனது 2024/2025 இற்காக சிலிங்கோ கட்டிடத்துடன் இருக்கின்ற உடன்படிக்கையை நீடிக்க வேண்டியிருந்தது. | அதிகாரசபைக்கான கட்டிட கொள்வனவு போட்டி மற்றும் சிக்கனமான வழியில் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையானது தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் காப்புறுதி வசதிகள் வழங்கப்பட்ட போதிலும் அவர்களுடைய ஊழியர்களிற்காக சுய பங்களிப்பு காப்புறுதி திட்டம் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. பதிலாக அதிகாரசபை பணிப்பாளர் சபையின் அனுமதி பெறாமல் காப்புறுதி மேவுகை பெறுவதற்காக 2023 ஆம் ஆண்டிற்காக பொது திறைசேரியால் வழங்கப்பட்ட நிதிகளிலிரந்து காப்புறுதி | அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் ஊழியர்களிற்கான பொருத்தமான மருத்துவ காப்புறுதி திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பணிப்பாளர் சபையின் அனுமதி இல்லாமல் காப்புறுதி மேவுகையை பெறுவதற்காக உரிய தரப்பினருக்கு எதிராக அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதிகாரசபைக்கு அதிகூடிய சிக்கன உள்ள காப்புறுதி பங்களிப்பை அறிமுகப்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| தவணைப் பணத்திற்காக ரூபா 2,079,158 ஆன தொகையை செலவழித்திருந்தது (2022- ரூபா 1,193,479). தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் 2017 ஆம் ஆண்டில் மாதம் ஒன்றிற்கு ஒரு ஊழியரிற்கு ரூபா 1,000 பங்களிப்பை சாட்டுதல் செய்வதன் மூலம் அரச சார்பு அரசதுறை ஊழியர்களிற்காக பங்களிப்பு காப்புறுதி திட்டத்தை விரிவாக்கியிருந்தது.<br>எவ்வாறாயினும், அதிகார சபையானது மருத்துவ காப்புறுதி மேவுகைக்காக 2023 ஆம் ஆண்டிற்காக ஊழியர் ஒருவருக்கு ரூபா 189,041 ஆன தொகையை செலவழித்திருந்தது. | | உடனடியாக நடவடிககை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அதிகாரசபையின் கொள்வனவு திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது ரூபா 45 மில்லயன் பெறுமதியான ஆறு (06) பிரதான கொள்வனவு நடவடிக்கைகள் அமுலாக்க வேண்டியிருந்தது.<br>எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது எவ்வித கொள்வனவு நடவடிக்கைகளும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. | • அனுமதிக்கப்பட்ட கொள்வனவு திட்டத்திலுள்ள அதிகமான நடவடிக்கைகள் ஈணைந்த கற்கை (JS) உடன்படிக்கை அறிவித்தல்கள் மற்றும் தகைமையுடைய முதலீட்டாளர்களுடன் JS உடன்படிககைகள் கைச்சாத்திடல் என்பவற்ன் முன்னேற்றத்துடன் வரிசையில் அமுலாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2023 இல் இணைந்த கற்கை (JS) பிரமாணங்களின் ளெியீட்டை பின்தொடர்ந்து சட்டக் குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் காரணமாக நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்தும் தாமதமடைவதற்கு முகம்கொடுத்தது. இதன்படி கொள்வனவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான பணிகள் JS நடவடிக்கைகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் பரந்தளவு அமுலாக்கப்பட வேண்டியிருந்தது.<br><br>• PDASL இன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அரசாங்கள வெளிநாட்டு பயணத் தடை தீர்மானங்களால் சில கருத்தரங்குகளில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்காததுடன் ஆகவே, கொள்வனவு திட்டத்தின் இல. 07 இன் கீழான திட்டமிட்ட கொள்வனவு நடவடிக்கைகளின் அமுலாக்கல் அடையப்பட | அதிகாரசபை அடுத்த ஆண்டு கொள்வனவு திட்டத்தில் பெறுமதிமிக்க நடவடிக்கையை உள்ளடக்கப்பட வேண்டுமென உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

முடியாதிருந்தது.

- கொள்வனவு திட்டத்தின் குறிப்பு 2 உடன் PADSL ஆனது சிறியளவான மீளமைக்கப்பட்ட அலுவலக இடத்திற்கு மீள்குடியமர்த்துவதற்கு கேள்விகளை கோரி மதிப்பாய்வு செய்திருந்தது. எவ்வாறாயினும், சபையானது டொலர் பரிமாற்றங்கள் தொடர்புபட்ட முரண்பாடான வீதங்களை ஈடுபடுத்தியமை வாடகை கொடுப்பனவு நிபந்தணை காரணமாக நகர்வதை அனுமதிப்பதற்கு நம்பிக்கையற்றிருந்தது.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 33 பதவிகளாக இருந்தது, உள்ளபடியான பதவியணி 10 ஆக இருந்ததுடன் 2024 செப்தெம்பர் வரை 23 வெற்றிடங்கள் நிலவியது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் தகுதிகாண் நியமனங்கள் நிரந்தர நியமனமொன்றின் தற்காலிக பரிகாரமாக மாத்திரம் செய்யப்படும். பதவி முழு நேரத்தில் சேவை வேண்டப்படுமாயின் வழமையன நியமனங்கள் தாமதம் இல்லாமல் செய்யப்படும். எவ்வாறாயினும் 2022 ஆம் ஆண்டிலிருந்து 02 நிரந்தர பதவி மற்றும் 2023 ஆம் ஆண்டிலிருந்து 02 நிரந்தர பதவி தற்காலிக அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்தது. | PDASL ஆனது மென்தீன் குறிப்பு மீதான ஏனைய அரசாங்கள முகவர்கள், காபன் உறிஞ்சல் பயன்பாடு மற்றும் பின்வாங்குதல், கைதரோயன் தொழில் நுட்பங்கள் என்பவற்றின் மீதான அதன் உத்தியோகத்தர்களிற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச பயிற்சி செயலமர்வுகளிற்கு வசதியளித்திருந்தது. அந்த அமர்வு, டிலோயற்றி மற்றும் ICF இன் விதிப்பு U.S அரச மின்வலு பணியக திணைக்களம் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு செலவு எதுவும் இல்லாமல் உள்ளக U.S. திணைக்களத்தால் நிதியளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திட்டமிடப்பட்ட அரசாங்கம் நிதியளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் வெளிநாட்டு பயணத் தடை மற்றும் உத்தியோகத்தர் இன்மையால் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. | சபையானது அதிகாரசபைகான உத்தியோகத்தர் தேவையின் உகந்த மட்டத்திற்காக தீர்மானம் எடுத்து அனுமதி பெறப்பட வேண்டும். |

### 3.4 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 16,500,000 பெறுமதியுடைய இரண்டு வாகனங்கள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாது இருந்ததுடன் கணக்காய்வு | WP-KU-8959 ஆம் இலக்க வாகனம் பணிப்பாளர் நாயகத்தில் உத்தியோகபூர்வ கவாகனமாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் தற்பொது | வாகனங்களின் வினைத்திறனான மற்றும் ஆக்கபூர்வமான பாதுாப்பு, பராமரிப்பு மற்றும் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட திகதியில் செயற்பாடற்று இருந்தது. | பதவி வெற்றிடமாக உள்ளமையால் அரிதாகவே பயன்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், உரிய உத்தியோகத்தர்கள் எலிகள் புகுத்தமையால் சேதமடைந்ததை திருத்துவதற்கு ஆலோசனை வழங்கியிருந்தனர்.<br><br>தற்போது அதிகாரசபையில் ஒரு சாரதி மாத்திரமே வேலை செய்வதுடன் சாரதி கடமைகளிற்கு இடையில் 4 வாகனங்களின் பராமரிப்பை மேற்கொள்வதற்கு ஒரு நபரிற்கு கடினமாக உள்ளது. WP-PB-7708 ஆம் இலக்க வாகனம் அதன் பற்றரி திருத்தப்பட்ட பின்னர் திரும்பவும் பயன்படுத்த முடியும். | பயன்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது. |